[திரு. தி. வேல்முருகன்] [2024 பிப்ரவரி 22

மக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் துரோகம் இழைக்கிறார். ஆதலால், அவர் தலைமையில் இருக்கின்ற வரையில் நமக்கு நீதி கிடைக்காது என்கிற கருத்தை நாம் வலுவாக உச்ச நீதிமன்றத்தில் எடுத்துவைக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் நாங்கள் Supreme Court-ல் சொல்லாமல் இருப்போமா! அவர் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 4-7-2021, 31-3-2022, 26-5-2022 மற்றும் 13-6-2022 ஆகிய தேதிகளில் கடிதங்களும், Minister for Jal Sakthi-க்கு ஒரு கடிதம் என்று ஆணையம் தொடர்பாக இத்தனை கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். அதன் பின்னர்தான், Supreme Court-ல் வாதாடி இந்த ஆணையத்திற்கு ஒரு தலைவரை நியமித்தார்கள். இவையனைத்தையும் மறந்துவிட்டு, இன்று வெளியே செல்ல வேண்டும் என்பதற்காக இங்கு ஒரு நாடகத்தை நடத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

(ஆ) சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புநிறை பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது. அதற்கு தீர்ப்பு நேற்றையதினம் நான் சொல்லிவிட்டேன். அதனால் நீங்கள் தயவுசெய்து. . . (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.